

# திராவிடத்தால் வாழ்கிறோம்

1236

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்










# #BANNEET

**தகுதி, தகுதி என்று சொல்லி திணிக்கப்பட்ட #NEET, Question Paper Leak, ஆள்மாறாட்டம், பயிற்சி மையக் கொள்ளை, அச்சுறுத்தும் Exam Hall Frisking என மாபெரும் உயிர் கொல்லும் Scam ஆகியிருக்கிறது. மோசடியான NEET தேர்வை ஒன்றிய அரசு ஒழித்தே ஆக வேண்டும்.**

**-மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்**

## புதிய துளிர்கள் உருவாகிக்கொண்டே இருக்கும்!



தி.மு.கழகத்தின் கொள்கைகளையும் சாதனைகளையும் சமூக ஊடகங்களில், எளிய மக்களுக்குப் புரியும் வகையில் எளிமையாக எடுத்துச்சொல்லி, இயக்கத்திற்குப் பலம் சேர்ப்பவர், அனிச்சம் கனிமொழி. அவருடைய குழுவினர் முன்வைக்கும் கருத்துகள், எதிர்முகாமில் இருப்பவர்களைக்கூட காயப்படுத்தாமல், கனிவோடு சிந்திக்கச்செய்யும் தன்மை கொண்டவை. அந்த இனிய பண்பால், புதிய உறவுகளைக் கழகத்துடன் இணைக்கிறார் என்பதை மெய்ப்பிக்கிறது, அனிச்சம் கனிமொழி அவர்களின் சமீபத்திய சமூக வலைதளப் பதிவு.

"நேற்றுதான் முதன்முதலாகப் பார்க்கிறேன்.

திருப்பூரில் இருக்கும் சித்ரா பார்த்திபன், நான் நேற்று கோயம்புத்தூரில் இருப்பதை அறிந்து வந்து, என்னைப் பார்க்கிறார்.

'எனக்கு அரசியல் தெரியாது, அதிலேயும் கட்சியினா என்னன்னே தெரியாது. எங்க குடும்பத்துக்கும் அரசியலுக்கும் துளியும் சம்பந்தமே இல்லை. ஆனால், இப்பல்லாம் யாராவது தி.மு.க.வைப் பத்தி ஃபேஸ்புக்கில் பேச மாட்டாங்களானு தேடிப் பார்க்கறேன்... காரணம் நீங்க' என்றார்.

கட்சித் தோல்விக்குப் பிறகு, ஒரு இல்லத்தரசி தி.மு.க. அனுதாபியாக மாறியிருப்பதைக் கண்டு மகிழ்ந்தபடியே அவரின் கரங்களைப் பற்றுகிறேன். 'கடந்த 6 மாசமா உங்க வீடியோஸ்லாம் பார்த்துப் பார்த்து நிறைய தெரிஞ்சுக்கிட்டேன். உண்மையில எனக்கு இப்போ தி.மு.க.வ ரொம்ப பிடிக்குது' என்று கட்டியணைத்தபடியே சொன்னார்.

'நிறைய எழுதுங்க... எங்களுக்குப் புரியற மாதிரி நிறைய பேசுங்க' என சித்ரா அக்கா சொன்னபோது, தி.மு.கழகம்ங்கிற வளர்ந்த மரத்தில் இலைகள் விழுந்துகொண்டேதான் இருக்கும். ஆனாலும், புதிய துளிர்கள் உருவாகிக்கொண்டே இருக்கும், சித்ரா அக்காவைப் போல' என்பது விளங்கியது. அதனால்தானே இத்தனை ஆண்டு காலமும் நிலைத்து நின்று நிழல் தருகிறது தி.மு.கழகம்" என்று உணர்வுபூர்வமாக எழுதியுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



'புல்லட்' கி.இரமேஷ்



### மணவிழாவை நடத்திவைத்த தளபதி!

2018-ஆம் ஆண்டு ஏப்ரல் 22-ஆம் தேதி, இன்றைய கழகத் தலைவர் அவர்கள் தலைமையேற்று, எனது மூத்த மகள் வழக்கறிஞர் ஆர்.இராஜலட்சுமி - தி.மனோஜ்பிரபாகர் இணையரின் திருமணத்தை, சிறப்பாக நடத்திவைத்தார்கள். தலைவரும் கழக நிர்வாகிகளும் எனது இல்ல மணவிழா நிகழ்ச்சிக்குத் திரளாக வந்து வாழ்த்தியது, எனக்கும் எனது குடும்பத்தாருக்கும் மிகுந்த மனமகிழ்ச்சியை ஏற்படுத்தியது. எனது வாழ்நாளில் மறக்கமுடியாத தருணமாக அமைந்தது.

**- 'புல்லட்' கி.இரமேஷ்,**
**பகுதிக் கழகத் துணைச் செயலாளர்,**
**திரு.வி.க. நகர் வடக்குப் பகுதி, சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பேரறிஞர் அண்ணாவின் அன்பு!

1950-ஆம் ஆண்டு இறுதியில், கவர்னர் ஜெனரலாகப் பொறுப்பேற்ற ராஜாஜி தமிழ்நாடு வந்தபோது அவருக்குக் கழகத்தின் சார்பில், கருப்புக்கொடி காட்டப்பட்டது. சென்னையில், 26 பேர் கைதாகினர். கழகம் தொடங்கி, முதன்முதலில் காங்கிரஸ் ஆட்சியால் கைது செய்யப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்ட முதல் அணியே அதுதான். முதன் முதலாகச் சிறைக்குச் செல்லும் அணி என்பதால், பேரறிஞர் அண்ணா அவர்கள் ஓடோடி வந்து, அவர்களுக்குப் பிரியாணி வாங்கிக் கொடுத்து, சிறை அதிகாரியிடம் 10 நிமிடம் அனுமதி பெற்று, அவரே பிரியாணி பொட்டலங்களைப் பிரித்துக் கொடுத்து உண்ணச் செய்து, பிறகு தழுதழுத்த குரலில் வழியனுப்பி வைத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900